உ

கடவுள் துணை

இருபத்திமூன்றாவது

# அகஸ்திய மகாமுனிவர்

# தண்டகபக்ஷிணி - 134

பூவதுவாசமாகும் பொருந்திய தண்டகத்தை
நாவதுயோடுந்தானே நடுவினையிருந்தக்கேளு
போவதுவருவதாகும் பூரணங்காப்பதாகு
மாவதுகோடிவித்தை யானந்தங்காப்புத்தானே. 1

மண்ணதுவிண்ணுமாகி மானிலத்தோர்களெல்லா
மொண்ணதுபொருள்தானென்று வுற்பனவிலக்கமாக
கண்ணறுமெய்புமாகி காரணமுடிவாய்நின்று
எண்ணுமித்தண்டகந்தானியம் புதற்கரிகாப்பாமே. 2

திருமகட்சோதியாகுஞ் செந்தலைவல்லிமாது
மருமகளவளேபத்தி மவுனத்தில்நந்திதோணக்
கருவதுநாமேசொல்வோங் கண்டத்தைவிட்டிடாதே
பருவமாமாதுகற்பப் பட்சிணியறிந்துகொள்ளே. 3

அறிந்துகொண்டென்னைத்தானே வந்தனதோதி
காட்டி, அறிந்துகொண்டென்னைப்போல யடக்கமா
யொடுக்குங்காலே, அறிந்துகொண்டது போதமாக
பூரணநாடன்னை, அறிந்துகொண்டாரும் பார்க்கவா
னந்த சோதிதானே, 4

## வேறு-தண்டகம்

உதித்தவெண்கரு மதித்தசெம்பாள்
துதித்தவுந்தியிற் பதித்தெழும்பாரே. 5

பண்டறிவித்தை யுண்டறிசத்தை
குண்டலிசத்தி மண்டலமுற்றே. 6

குத்தறிவித்தை சத்தறிசத்தை
பத்தறிபெட்டியுள்ளது முற்றே. 7

முத்தினிற்செம்மை சத்தினில்நன்மை
பத்தினிநுண்மை யுத்தமறிவே. 8

பட்டினிகெடவே விட்டிடுநடுவே
உட்டிடுவுடனே மட்டிடும்பாரே. 9

அக்கரைமீனை சக்கரைத்தேனை
நக்கிடமானிற் பக்குவமாமே. 10

முகமதுபுள்ளி யகமதுவல்லி
செகமதுசொல்லி பகலிருளாமே. 11

தலைக்குமேற்காலை மூலைக்குமேற்பாலை
கலக்கியேகொள்ள மலைக்குமேலாமே. 12

கொழுமிஞ்சிகாயில் அழுமிஞ்சிச்சேரில்
வழுமிஞ்சிபுனலைத் தெளிமிஞ்சித்தெளிவே. 13

கோட்டுமூலைமாது கூட்டுந்தலையேது
பாட்டிவிவட்குது காட்டிமறைவாளே. 14

அஞ்சிலிவள்பிஞ்சி நெஞ்சிலவள்துஞ்சி
வஞ்சியிடைகொஞ்சி விஞ்சைப்பயில்வாளே. 15

சொல்லறிந்துவோது வல்லமையுமாகும்
புல்லறுக்குசோதி யில்லமதிலாமே. 16

தேசிகருநீரை வாசிபதிருலை
வீசியெழுகாலை காசிநுனியாமே. 17

ஆதிமுதலோனை பாதிதருவானை
யூதியமுமாகுங் காதில்மொழிபேசே. 18

எந்தவழிபோவாய் வந்தவழியாரு
அந்தமனையாதி சொந்தமனைதானே. 19

மனையாட்டிதனையே யிணையூட்டும்போது
தனையாட்டிநீயு மெனையூட்டிமேலே. 20

பாட்டினிலுமில்லை காட்டினிலுந்தொல்லை
நாட்டினிலுமில்லை யூட்டினதுமாமே. 21

பாத்திமையின்கண்ணை நாற்றிசையிலுன்னைத்
தோத்திரமும்பண்ணை மாத்ததிகம்பொன்னே.

தொழிற்செய்யும்விந்து பளிச்செனவந்து
ஒளிச்சதைநின்று விழிச்சதைப்பாரே. 23

தலையினில்விதியே வுலையினில்மெழுகே
அலைவதுமேது நிலையினிலறியே. 24

மந்திரமதுவே தந்திரமறியே
னுன்றிரந்தானே யெந்திரமறியே. 25

பண்டுளதிளமை யுண்டறிவளமை
தண்டலையடிமை கொண்டதுபதியே. 26

பதிமனதுளமே நதிபுனல்வளமே
ததிமிதுபழமே கெதியெனலாமே. 27

ஓதுவதுமுறையே மாதுதனதுளமே
கோதுபழுதிலையே நீநமதுபுனலே. 28

வேறுதவியிலையே கூறுமொழியறியே
ஆறுதினமதிலே தேறிமனதுறையே. 29

ஓடியிருகாலை வாடியெனவோது
பாடியவள்மாது தேடிவருவாளே. 30

கச்சணியுங்கொங்கை யிச்சையுடன்வருவாள்
பட்சணியேயென்று கெச்சையினில்வையே. 31

புத்தியுடன்மாது பத்தினியாளெனவே
சித்தினியுமாகி முத்தியருள்வாளே. 32

பாட்டில்நலம்பாடி மேட்டிமைகள்பேசி
நாட்டிநிதிதேடி வீட்டில்வருவாளே. 33

நாலுமறைவேதம் ஓலமிடுமாது
கோலம்பலவாகி நாலுமொழிவாளே. 34

போதகத்தின்சொல்லி நீதகத்தின்வல்லி
மாதுபுத்திசொல்லி நாதமுத்தியாமே. 35

தம்பலத்தின்பூச்சி செம்பருத்தபூவை
யும்பலத்தைவிட்டு வம்பலத்தில்நில்லே. 36

பச்சைநின்புகழை நச்சரவின்வாயில்
பிச்சையுடன் நடவி கெச்சைபிணிலைலறே. 37

தொல்லவினைதீர நல்லரவன்வாயிற்
புல்லறுயோதி தில்லைநடம்பாரே. 38

ஆடரவின்வாயில் ஓடுரசம்வாரு
நாடுநவலோகம் நீடுபுகழாமே. 39

வாலைசிறுமாது காலுமதிநாலு
மேலுமதையோது பாலுமதுவாமே. 40

மறைநாலுவேதங் குறையாறுபோதம்
முறையாதுநாதந் துறையாகும்பாரே. 41

அகத்தியனைப்பாரு சுகத்திலெனைச்சேரு
மகத்துவமுமாகு மலத்திலதுவாமே. 42

வேறு

ஓடிவிளையாடுகிற காலினாலே
தேடுபொருளாகுமது யேழினாலே
வாடுவதுயேதுமிலை நாலினாலே
ஆடுமதுவாதமுறை கோடியெனலாமே. 43

தாண்டிவிளையாடுமுறை யந்தமுறைபாரு
வண்டிமனையாளருகி லண்டிமொழியோது
கண்டுமலையாதேயிரு பண்டுருதியாகுந்
தொண்டுபுரிநாதவொளி கண்டுகதிரேறே.

சூதுகபடுள்ளவழி மூன்றுவழியாகு
மாதுதனதுள்ளமதி தொன்றுவுரைமேலும்
கோதுபழுதில்லையதில் வேதையதில்தோணும்
யேதுமொழியுள்ளறிவு மேலுபரமாமே. 45

வேறு

போடுமதுபோது வோடுவதுகீழே
பாடியெடுவசிய மாடுமதுபாரே. 46

மேனியதின்சாரை தேனிலதுவாரே
ஆனிலதுசேரே வானிலெழுமாமே. 47

போதுமதுபோது

தேசிகனிரசமே வூசிதமாய்நிதமே
ரேசிதமாய்வழியே மாசிவெயில்போடே. 48

பார்மகளும்நாவில் ஓடுமெனவுமாவில்
தாமெனவுமாவ ளாமெனவும்பாரே. 49

அஞ்சதிலேநஞ்சு நஞ்சதிலேபிஞ்சு
நெஞ்சுருதியஞ்சு மஞ்சனுயிர்போமே. 50

வள்ளிதிருவாளுல் வுள்ளமதிற்போனுள்
துள்ளிவிழுங்காலி லள்ளியுணர்வாமே. 51

குழியானைசேரை வழிபாதையறியே
தெளிவானபேரை யொளியாமல்மறையே. 52

மறையுமதுபோது கறையுமதுநில்தம்
துறையுமிதுபானு பறையுமிதுசபையே. 53

சபையதிலும்நடுவே யலைபயமிடும்போது
வுபாயமறியாம லமயமிடுவாரே. 54

வேறு

ஆடுகிறபூரணத்தி னுட்டசூட்சா
மதிவிடையமாதுகுறி சருருஞ்சொன்னேஞ்
சூடுகிறபூமலரின் வாசங்கண்டு
சூதுபலதொழிலாடி கொள்ளச்சொன்னேம்
பூடுசெடிவிருட்சமுதல் மூலைத்தாகின்று
புல்லறுகுசாகாத்தின் பொருளைச்சொன்னேம்
நாடுதனிற்கருவாளி நீயேயானல்
நச்சரவின்விஷம்போக்கி வமுர்தமுண்ணே. 55

வேறு

மாதொருத்திமுத்தி காதிருகால்பொத்தி
வீதிதருசுத்திச் சோதிமொழிவாளே. 56

நாகவடிமாடி போகயிடந்தேடி
தேகமதுவாடி பாகமறிவாளே. 57

எட்டுவிசைசொன்னேங் கட்டுநிறையுள்ளே
நட்டெநடுவீதி விட்டகுறையாரே. 58

கண்டறிநேமம் உண்டறிசத்தே
பண்டுடவித்தை தண்டலையாமே. 59

தண்டலையாரே விண்டுறையாதே
மண்டமெட்டுங் கண்டுயமாமே. 60

ஊமையின்வாயமுது நாமயதாகும்
கோமளையுமாது கோழுகமுமாமே. 61

கண்டுளகணியை வுண்டிடவாதி
சண்டனுமிலேயே கொண்டுபுரிவாரே. 62

வேறு

உண்டபலனுனக்குத் தான்கண்டுதேரு
உள்ளமதின்பட்சணியை யுள்ளேபாரு
கண்டுகொள்ளவுண்டுபார் தண்டகத்தின்
கருவிடையமருந்து கொள்ளத்தப்போயில்லை
சண்டாளன்கையாலே மாள்வதில்லை
மதியமுர்தமுண்டு வெளியேறுவாயே
சதாகோடிச்சித்தநிலை க்ஷணத்தில்தோணும்
மண்டலங்கள் மூன்றுமறைக்ஷணத்தில்தான்.

வேறு

மதிவளர்தவறியே நிதிபெருகுவிதியே
திதியுமொருதினமே நதியுமிதைபறியே. 64

ஆதிதலைசோடே சோதிமயமாகி
மாதிளமையாகும் வீதிதனிலேறே. 65

ஏறுதலைசொல்லிக் கூறுமொழிதல்லி
ஆறுதலைவல்லி தாரமெனலாமே. 66

வம்புகளையறவே செம்புனலிலேநீரே
தம்புலனையறியே யும்பரறிவாரே. 67

பேரிவைமாதர் ஆரறிவார்ஊது
சீரிவனுலு நேர்நிறையுமாமே. 68

வேறு

ஓடுகிறகாலமறிந்து வணையிற்றூக்கி
உற்பன்மாஞ்சதாகோடி வித்தையாடி
பாடுகிறநாவறிந்து பாடிக்கொள்ள
பக்ஷிணியிலாடிநின்ற கருவைச்சொன்னேம்
ஆடுகிறதொழிலாளி நீயேயானால்
ஆடுதிருவாடுதுறை யாட்டைக்கண்டு
கூடுகிறகாலறிவா யோடிக்கூடு
கோடிசித்து அரைட்சண,த்திலாடுவாயே. 69

ஆடுவாயுனைக்கண்டு யென்னைக்கூட்டி
ஆச்சரியம்பட்சணியை கண்டுகொள்ள
தேடுவாரெங்கேயடா வரிவாருண்டோ
செகத்திலேயவனைக்கண்டா லுன்னைக்காண்பேன்
மாடேநீயறியாட்டாற் சும்மாபோடா
வையகத்திலலைந்துகெட்ட மாடேபோடா
காடேபோய்த்திரிந்தலைந்து போகவேண்டாங்
கருத்துள்வைத்துப் பட்சணியைப்பாருபாரே.

வேறு

உண்ணுவதுகாம மெண்ணுவதுநேமம்
உன்னதிவையோதி சன்னிவெளியோரே. 71

கல்லுருகுஞ்செம்பு வல்லிருளில்நம்பு
புல்லறுகுதும்பு சொல்லிலதுவம்பு. 72

பூத்தமலரரும்பு யேத்தருமளகொம்பு
சேத்தபுனலத்தில் மாத்தநிகமாமே. 73

மீக்கிலாட்டைக்கண்டு தாய்க்குலாட்டையுண்டு
பேய்க்குளாட்டில்நின்று கூக்கிலாட்டைப்பாரே. 74

பாருக்குள்பரப்பை கூறுமொழிசிறப்பை
தேறிமனத்திறப்பை தாறுதலமறியே. 75

தள்ளுகிறகாடே தெள்ளமுர்தமாகும்
எள்ளளவுபொய்யை விள்ளவில்லைநாமே. 76

கச்சணியுங்கொங்கை பட்சணியுமாவாள்
எச்சமுதலாவாள் கச்சுருகிபாரே. 77

தண்டையிடுகாலி லண்டபிரான்மாது
தெண்டனிடுவாரை தண்டலையுமாமே. 78

ஏகமனதாக போகமதைநீயும்
சாகமனதாகி போகமெனலாமே. 79

மங்கைமுதுகண்ணில் தங்கையொடுபிசைய
தங்கள்கதிர்சேரு மெங்கள்குலமாமே. 80

முகுர்த்தமொருநாளில் வருத்தமிருநாளிற்
பகுத்தறிவுபாதம் நிகழ்ந்திடும்வினையே. 81

பஞ்சவடிவாளை நெஞ்சில்நினைவேனை
தஞ்சமதுவாகிக் கெஞ்சிவருவாளே. 82

புல்லருகிருமேல் வல்லசுரர்மாள்வர்
சொல்லவரிதாகும் நல்லபதஞ்சேசே. 83

வீச்சிடுமயத்திற் பாச்சிடும்ரசத்தை
பேச்சிடுவிஷங்கள் போச்சென்றெனலாமே. 84

கொல்விமலைமாது சொல்விமொழியேது
வல்லியுனதாக மெள்ளவருவாளே. 85

வருவதுநீபாரு வுருவதுநீசேறு
கருவிதுவுமாகுந் தெருவில்விளையாடே. 86

புண்டரீகமாது கண்டுவிளையாடு
கொண்டவளுமாடு தொண்டுபுரிவாளே. 87

மாதமுதகண்ணீர் சோதிநிறையாகும்
சூதமதில்வாரு வாதமுறையாமே. 88

சொன்னகருவறியே சன்னபவமொழியே
பொன்னையதிர்நிசமே யென்னைவளைவசமே. 89

கச்சசுரக்கரியே மிச்சமிதுபிலையே
வச்சமிதுபொசியே மச்சுவிஷமிலையே. 90

தலைச்சுருளிவேணை விலையறியமாதே
உலையில்மெழுகாகி நிலையில்வருவாளே. 91

அரிராசிகன்னி நிரைராசியாவாள்
துறைராசிவேறு கருவாளியறியே. 92

காலையதின்பாலை வேளையதில்வாரு
கோளையவள்மாது ஆளையிடுவாளே. 93

சோதினையுமாகு மாதிகருநாதம்
வாதிமகனுவாய் கோதுபழுதிலேயே. 94
ஊமச்சின் பூசி துமச்சிலேயூட்டி
மானிலத்திலேற்றி காமுகத்தில்வையே. 95
வைத்திடுமவள்மாது சுத்திதலேவீசுங்
கொடுத்தடுமையாசி முத்தமிடுவாளே. 96
வாரலூத்தின்முன்னே காரணத்தின்மண்ணே
பூரணத்திலென்னே மாரணத்தில்வாரே. 97
கலகமிடுமாது வலதழியுநீயும்
யுலேயில்மெழுகாகி இலர்தமீடுபாரே. 98
வாடியிலேநீரைக் கோடிதனில்வாரு
வோடியவள்மாது தேடிவருவாளே. 99
காச்சமாமுதிர பேச்சுரையின்பாக
பேச்சுவடிமூலந் தேச்சிவிடுபாரே. 100

வேறு

ஏழதிலேமாதுகுறி யறியச்சொன்னேன்
எட்டதிலேவிட்டகுறை தோணச்சொன்னேன்
நாளதிலேதிருநாளேப் பார்க்கச்சொன்னேன்
நாட்டிவன்றுனுடிநின்ற காலேச்சொன்னேன்
சூழுகின்றகருவீரியல்லா முறுதியாலே
சுட்டுவிட்டதுறைபறிந்து பார்க்கச்சொன்னேன்
வேளேயென்னநயனத்தை தூண்டிக்காட்டி
வெட்டவெளியாகவுமே சொனனேன்கேளே. 101

வேறு

ஆதிபதிசுயம்பில் ஆதியெடுமெழுகில்
பூதகனில்நிரம்பி வீதிவருவாளே. 102
நாலுதலைநீரை நாலதிசேறு
ஓலமிடுமாது வாரைசமாமே. 103
சுட்டிபலதொழிலாள் கெட்டியவளெழிலாள்
விட்டகுறையறிவா ளெட்டியவள்தானே. 104
பிள்ளைதின்னும்பேய்ச்சி கள்ளியவளாச்சி
வுள்ளபடிஞச்சி வெள்ளியெனலாமே. 105
வெள்ளியிறுஞ்சிவப்பி தள்ளிவனதுவப்பி
வுள்ளபடிகருப்பி மெள்ளவருவாளே. 106
கடிதடத்திலுள்ள படியிடத்தில்விள்ள
அடிஅடித்தமாது வடியவிட்டதறியே. 107
அறியிலவளுனையே குறியபழந்தனையே
நெறியவிவள்தனையே பிரியவகைதனியே. 108
பத்தினியுமாகு முத்தமியைச்சேரு
பெத்தவனுகில் வுத்தமுலைப்பாலே. 109
பாலுமுளதாகில் மலயனுமாவைப்
பாலனையும்வெல்ல பாலவிஷம்போமே. 110

வேறு

ஆமிந்தப்படினுமோ யானேனும்பாரு
வகத்திலகங்கண்டறிவை யறிந்துபாரு

நாமிந்தபட்சணியைக் கண்டுகொண்டோம்
நாதாந்தகுருவாகி வருவனைப்பெற்றோம்
ஓமிந்தப்படிபார்த்து பார்ப்போர்தன்னை
யுச்சரித்துபூரணமாங் குப்பத்துள்ளே
போமிந்தப்பூரணத்தைநப் போகாமற்றான்
போதறிவானுட்கொண்டா லறிவார்பாரே. 111

பாரடாதண்டகத்தி னறிவாஞ்சூட்சம்
பகாரிதுகொங்கணார்தன் பட்சணியைப்பாரு
ஆரடாயதையறிவா ரிதனைப்பாரு
வன்னாலுமிந்நூலு மொன்றாய்ப்போச்சு
தேறடாமனந்தேறி யறிவார்பாரு
ஜெகஜாலவித்தையெல்லாம் பட்சணியேயாகும்
யேறடாவெளியேறி யின்னாலேநீ
யென்னைப்போலவிருந்துகொள்வா ரொருத்தரில்லை
சீரடாவைந்தான நாலாங்காலை
சீரறிந்துகொண்டவனே சித்தனாமே. 112

வேறு

வேகமதுவிதியே பாகமதிற்சேரு
நீதமதுபாரு வாதிகுருநீயே. 113

நீயெனதுபிள்ளை நானுனதுதந்தை
தேனிலதுவின்பந் தானுமதுவாமே. 114

ஆமெனுமெழுத்தை வோமெனவும்போது
காகமதுதாமு மாயனதுதானே. 115

கஞ்சமலரனையே பஞ்சமிலினையே
செஞ்சொல்மொழிபலேமல் நெஞ்சிலிதுவரையே.

ஆறுவரையேலே கூறுமொழியாரு
ஓதுமதுபாலு மேறில்விளையாடே. 117

வெள்ளியிருகாலை வுள்ளேயிடுநாளை
தெள்ளியெனுமாசி வள்ளலெனுமாமே. 118

தேசியதுமாலை நேசியதினாலே
பூசிவிடுமேலே வாசிதனிலேறே. 119

நெஞ்சாரப்பொய்யை அஞ்சாமற்சொன்னேன்
துஞ்சாமற்கேளு மிஞ்சாமற்பாரே. 120

வேறு

என்னாணையிதைவிட்டு விடாதேசொன்னேன்
யேகாந்தவிந்தாலே தன்னைக்கட்டு
முன்னாணைசத்தியமாய் விண்டேன்பாரு
மூவுலகத்தோர்க்கோது யென்னைக்காண
சொன்னாலுந்தெரியாது மனையாட்டிவாழ்க்கை
சுகபோகத்தாலறிய மாட்டாயானால்

உன்னுணையுனக்குநாட் டொழிந்தபேச்சை
முழுமூடாமறந்துவிட்டா லின்னங்கேளே. 121

கேளாதபாவியா ருனக்குத்தந்தை
கேவலமாய்விட்டுவிட்டா லுன்னைத்தானே
பாழானசேதிசொல்ல சற்றேகேளு
பச்சைமால்நீயாவாய் பத்தும்பாரு
மாளாமல்மாண்டயிட மம்மாவம்மா
மதிகெட்டுவலையாலே சும்மாய்வீணே
யேழானவேழறிந்து யேழைபார்த்து
யென்னைப்போலுண்டுவெளி யேறுவாயே. 122

ஏறுவாயறிவாலே தேறிக்கொள்ள
யேகவுபநிடதமான சோதியாலே
தேருவாய்கண்டகண்ட தறிவாய்க்கொள்ள
சிந்தித்தபொருள்வாக்கு மருளேயாகும்
ஆறுமொருதலமதிலே யேறச்சொன்னேன்
அதின்பிறகேமால்கொண்ட தறிவாய்பாரு
ஊருவாய்மூடுதற்கு மூடியுண்டோ
உச்சரித்துப்பட்சிணியைத் தன்னைப்பாரே. 123

வேறு

நேத்திரத்தின்வழியே பார்த்திருக்குமொளியே
சூத்திரத்திற்கதிரோன் தோற்றும்வெளியாரே. 124

வேறு

தோற்றுவதுகதிர்கோடி காந்திவீசுஞ்
சுழிமுனையில்கண்ணோட்ட மேற்றிப்பாரு
பார்த்திடவேகதிர்கோடி பிரமைதோணும்
பகலிரவுமற்றவிடம் பதிவாய்ப்போகும்
ஆற்றமுனக்கிப்பதியில் மனந்தான்போக்கி
மகத்தானமாய்கையென வொதவிப்போச்சு
பார்த்தவிடம்பரவெளியாய்த் தோணலாச்சு
பகரிதுயித்தனைய் முணர்வித்தானே. 125

வேறு

விந்துதித்தவாதி வந்துதித்தபோதம்
யெந்தவிதத்தாடுமோ யந்தவிதத்தோடுமே. 126

ஓடுமதுபோது நாதனிலைவானில்
தேடுபொருள்வேதந் தாணிமுறைநாணல். 127

ஆடுவதுதானே நாதவொளிபாரு
கூடுவதுயாணு மாடுமவள்பாரே. 128

நிட்சயமாய்வந்துதற் சொருபநிலைபாரு
வச்சமில்லைமுன்பு வச்சபொருள்தேடு. 129

கச்சுருகியாக செச்சையிலேயேறு
பச்சைவண்ணரூபி திருபட்சணியுமுற்றே. 130

வேறு

திருமகள் பதியிலாதிதருவருவாகிமேகி, அருவு
ருவாகிமுற்ற வகத்தியனென்றோர்நாமும், கருவது
காட்டி யீசன்கையினிலணைந்தவையன், பருவமுமிது
வேயென்று பட்சணியுரைத்தேன் முற்றே. 131

தண்டலையாதிருகத் தண்டகமோதும்போது
வண்டருமுனிவர்போற்ற வகத்தியனென்றேநாமங்
கொண்டதுடனீசன்வந்து குருமுனியென்றேகூறி
பண்டுளநாதியெனாபால் பட்சணியென்றேமுற்றே.

பட்சணிநந்திமூலர் பாடலும்நம்மைப்பார்த்து
பட்சணியாடினார்கள் பகிரண்டதண்டகத்தில்
நிட்சயமிந்நூல்தன்னில் நிகழ்த்தினேமகமொன்று
யச்சமில்லைபாரா யாதியாங்காப்புமுற்றே. 133

முற்றிலும்நூறுங்கூட்டி முப்பத்திரண்டும்பாரு
முற்றிட மதுவாய்காணும்மூப்பென தாரிதோணுங்
கற்றவரென்னூல்தன்னை கைவிடார்கருவைக் காண்
பார், செத்தபேரில்லையின்னூற்செப்பவுமுத்தியாமே.

அகஸ்தியர் தண்டகபக்ஷிணி-134

முற்றிற்று.